**திருப்பூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ப.மு.எண்.6681/ அ1/2023 நாள். 12 ,04.2024**

பொருள்: பள்ளிக் கல்வி – அமைச்சுப்பணி – கருணை அடிப்படை நியமனம் – திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி. செ. ரேவதி என்பாருக்கு பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டது – சார்பு

பார்வை: 1. இவ்வலுவலக இதே ந.க.எண். நாள். 22.06.2023
2. அரசாணை (2டி) எண்.160 பள்ளிக்கல்வித் [தொக3(1)] துறை நாள்.17.11.2023.
3.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளார் தொகுதி) அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.050585/ஜே/இ2/2023 நாள்.11.03.2024

************

பார்வை 1– இல் காண் இவ்வலுவலக கடிதத்தின்படி, கருணை அடிப்படை மூலம் நியமனம் செய்யப்பட்டு திருப்பூர் மாவட்டம் அவிநாசி வட்டாரக்கல்வி அலுலவகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி வரும் திருமதி. செ. ரேவதி என்பாருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கிடும் பொருட்டு கருத்துரு தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) அவர்களால் அன்னார் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு பார்வை 3–இல் காண் கடிதத்துடன் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது.

பார்வை 3 இல் காண் செயல்முறை நகல் மற்றும் பார்வை 2இல் காண் அசல் ஆணை மற்றும் தனியரது பணிப்பதிவேடு ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது. அசல் அரசு ஆணையினை உரியவருக்கு வழங்கி ஒப்புதல் பெற்று கோப்பில் வைக்கவும், பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் அறிவிக்கலாகிறது. மேலும் பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்புமாறு சம்மந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: 1) பணிப்பதிவேடு 1 தொகுதி
2) பார்வை 2 இல் காண் அரசு ஆணை அசல்
3) பார்வை 3இல் காண் செயல்முறைகள் நகல்
4) 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அசல் – 1
( Sl.No.AA 1577394 / ப.எண். 148740/APR1991)

முதன்மைக் கல்வி அலுவலர்
திருப்பூர்

பெறுநர்
சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய அலுவலர் மூலமாக).

நகல்
1. மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) திருப்பூர்.
2. வட்டாரக்கல்வி அலுவலர் அவிநாசி.